2011 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2011), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

@ 7-2-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தியாகிகளின் சிலைகளை உருவாக்கியும் அவர்களின் குழந்தைகள் கண்ணீர் வடிக்கக்கூடாது என்று 55 இலட்சம் ரூபாயை நேற்று மா.பொ.சி. அவர்களின் சிலைத் திறப்பு விழாவில் அளித்தார்கள். வியாபார பெருமக்களாகிய நாங்கள் தமிழக அரசு கொண்டு வந்திருக்கிற சட்டம் 22-ன்கீழ் 10-இல் புதியதாக மதிப்புக் கூட்டு வரி சட்ட விதி எண் 19-8-2010 அன்று கொண்டு வரப்பட்ட இந்த வரி 1-1-2007 முதல் முன்தேதியிட்டு அமல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட விதி ஏற்கெனவே மதிப்புக் கூட்டு வரி சட்ட விதி எண் 19-ன்கீழ் (1), (2), (7) மற்றும் (8) ஆகியவற்றுக்கு முற்றிலும் எதிர்மறையாகவுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தச் சட்ட விதியை அமல்படுத்தினால் வணிகர்கள் கடும் நஷ்டத்தைச் சந்திக்க நேரிடும் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். சட்ட விதி 19, 20 அமல்படுத்தப்பட்டால் வணிகத்திற்கும், வணிகர்களுக்கும் ஏற்படும் பாதிப்புகள் ஏராளமாக இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், நீதிமன்றங்கள் discount தொகைக்கு வரி விலக்கு உள்ளது என்று தீர்ப்பளித்த தீர்ப்புகளை, உதாரணத்திற்குக் குறிப்பிடுகிறேன். Trade discount, Cash discount, Bonus discount, Service discount, Quality discount போன்றவற்றுக்கு வரி விதிக்கக்கூடாது என்று Value Added Tax சட்டத்தில் இருக்கிறது.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இலட்சக்கணக்கான வியாபாரப் பெருமக்களுக்கு ஏற்படவிருக்கிற நஷ்டத்தைத் தவிர்த்து அவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கும்படி உங்கள்மூலமாக வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார். வியாபாரிகளுக்குக் கழிவுக் கொடுக்கின்றபோதே, 10 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு பொருள் வாங்கினால் அதை 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்றால் Bill-லிலேயே அந்தக் கழிவைக் காட்டிட வேண்டுமென்று விற்பனை வரித் துறை சொல்கிறது. 10 ஆயிரம் ரூபாய்க்கு வாங்குகிறார்கள்

2011 பிப்ரவரி 10] [திரு. சி.நா.மீ. உபயதுல்லா]

9 ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறார்கள், விற்கின்றபோதே அவர்கள் அப்படிக் குறைத்து விற்பதை அந்த Bill-லிலேயே காட்டிவிட வேண்டுமென்பது துறையினுடைய அறிவுறுத்தல். ஆனால், இவர்கள் 10 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய பொருளை பிறகு 9 ஆயிரத்திற்கு விற்றால் அதிலே 12.5 சதவிகித வரி இருக்கிறது. 125 ரூபாய் அதிலே அரசுக்கு இவர்கள் பணம் இருப்பதாக காட்டப்படுகிறது. அந்த நிலை தொடர்ந்து இருந்து வருவதை ஏதாவது இவர்கள் விற்பனை வரி கட்டியிருக்கிறார்களா என்று பார்க்கின்றபோது எதுவுமே கட்டுவதில்லை. அதைத் தொடர்ந்துதான் இத்தகைய ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்தத் திருத்தம் கொண்டு வந்ததற்குப் பிறகு இவர்கள் என்ன வரி கட்டியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

வியாபாரிகள் கட்டுகிறார்கள் இல்லையென்று சொல்லவில்லை. இன்றைக்கு 3 கோடியே 19 இலட்சம் ரூபாய் வரி வந்திருக்கிறது. இது மிகக் குறைவு. இன்னும் அதிகமாக வரவேண்டும் அதைத்தான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவரிடம் நீங்கள் நேரில் வாருங்கள் இதைப்பற்றி அதிகாரிகளோடு கலந்து பேசுவோம், இருக்கின்ற குறைபாடுகளை அவர்களுக்குத் தெளிவுபடுத்துவோம் என்பதைக் கூறியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வசந்தகுமார், நீங்கள் சொல்லிவிட்டீர்கள், போதும். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.